

மிக எளிதானது தியானம்.
நாம் அதை
சிக்கலாக்குகிறோம்,
நழுவ விடுகிறோம்.

வசந்த இதழ்
Vasanta Ethal
KRISHNAMURTI FOUNDATION INDIA JUNE 2010 - AUGUST 2010 Rs.2/- VOL. V ISSUE 2

# முன்னேற்றம் என்னும் மாயை

தொழில்நுட்ப அறிவின் தேவை நமக்கு மிகவும் அவசியம் என்றாலும், நம் மனப் போராட்டங்களையும் மன அழுத்தத்தையும் தீர்த்துவைக்க அதனால் முடியாது. வாழ்க்கையின் ஒட்டுமொத்த வழிமுறையையும் அறிந்து கொள்ளாமல் நாம் தொழில்நுட்ப அறிவை அடைந்ததால், நம்மை அழிப்பதற்கான சாதனமாக அது மாறிவிட்டது. அணுவை எப்படி பிளப்பது என்று அறிந்திருக்கும் ஒருவன், தன் மனதில் அன்பற்றவனாக இருக்கும் பட்சத்தில், அவன் அரக்கனாகிறான்.

முன்னேற்றம் என்ற சொல்லின் வெளிப்படையான பொருளிற்கேற்ப வளர்ச்சியைக் காணமுடிகிறது; புதிய கண்டுபிடிப்புகள், தரம் உயர்த்தப்பட்ட கார்கள், விமானங்கள், குளிர் பதனப் பெட்டிகள், முன்னேறும் சமுதாயத்தின் மேலோட்டமான அமைதி என்பதாக நம் வாழ்க்கையை மேலெழுந்தவாரியாக மாற்றம் செய்யும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இத்தகைய முன்னேற்றங்களுக்கு நமது சிந்தனையில் அடிப்படை மாற்றம் கொண்டுவர என்றேனும் சாத்தியமாகுமா?

☞ 2

## எதிர்ப்பதங்களின் சச்சரவு

தீயது என்று ஒன்று உள்ளதா என்ற கேள்வி எனக்கு எழுகிறது. தயவு செய்து உங்கள் கவனத்தை அளியுங்கள். நாம் சேர்ந்து இதை ஆராய்வோம். நாம் நல்லது, தீயது இருக்கிறது என்கிறோம். பொறாமையும், அன்பும் இருக்கிறது. பொறாமையை தீயது என்றும், அன்பை நல்லது என்றும் கூறுகிறோம். நாம் ஏன் வாழ்க்கையை, இது நல்லது, அது தீயது என்று பிரிக்கிறோம், பின்பு அதன் மூலம் எதிர்ப்பதங்களின் சச்சரவை உருவாக்குகிறோம்? நம் இதயங்களில் பொறாமை, வெறுப்பு, வன்முறை, இரக்கமின்மை, கருணையின்மை ஆகிய உணர்ச்சிகள் இருக்கிறது என்பதை மறுக்கவில்லை. ஆனாலும் நாம் ஏன் வாழ்க்கையை நல்லது என்றும், தீயது என்றும் பிரிக்கிறோம். உண்மையில் கவனக்குறைவான மனம் என்ற ஒன்று மட்டும் உள்ளது. முழுகவனம் இருக்கும்போது, அதாவது மனம் கவனத்துடன், நுண்ணுணர்வுடன், கூரிய பார்வையுடன் இருக்கும்போது நல்லது, தீயது என்று ஒன்றும் இல்லை; அறிநிலை ஒன்று மட்டும் உள்ளது. நல்லுணர்வு என்பது ஒரு தருமமோ, ஒழுக்கமோ அல்ல; அது ஒரு அன்புநிலை. அன்பு உள்ளபோது நல்லதும் இல்லை, தீயதும் இல்லை – அன்பு மட்டும் இருக்கும். நீங்கள் ஒருவரை காதலிக்கும் போது நீங்கள் நல்லது பற்றியோ, தீயது பற்றியோ எண்ணுவதில்லை; உங்கள் முழுமையும் அன்பால் நிரம்பி இருக்கும். முழு கவனமும், அன்பும் இல்லாத போதுதான் ‘‘நான் இவ்வாறு இருக்கிறேன்’’, என்பதற்கும் ‘‘நான் இவ்வாறு இருக்கவேண்டும்’’ என்பதற்கும் சச்சரவு ஏற்படுகிறது. அப்போது நான் எதுவாக இருக்கிறேனோ அது தீயது, நான் எதுவாக இருக்க வேண்டுமோ அது நல்லது என்று கூறப்படும் ஒன்று.

நீங்கள் உங்கள் மனதைப் பாருங்கள், எதுவாகவோ ஆகவேண்டும் என்று மனம் எண்ணாத அக்கணமே அது செயலின்றி இருக்கும். அது ஒரு மந்த நிலையோ, தேக்க நிலையோ அல்ல: அது முழு கவன நிலை, அதுவே நல்லுணர்வு

The Book of Life, பிப்ரவரி 22

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனித இனம் எப்படியிருந்ததோ அப்படியேதான் இப்பொழுதும் இருக்கிறது. பேராசை, பொறாமை, எதிர்ப்பு, கலக்கம் என்ற உணர்வுகளோடும், எப்போதாவது வரும் களிப்போடும், அன்போடும், மனிதன் இருக்கிறான். வெறுப்பு, பயம், மற்றும் மென்மை, ஆகியவற்றின் விசித்திர கலவையாக நாம் இருக்கிறோம்; வன்முறை, அமைதி என்ற இரண்டாகவும் நாம் இருக்கிறோம். நமது முன்னேற்றம், மாட்டு வண்டியிலிருந்து ஜெட் விமானம் என்று வளர்ந்திருந்தாலும், மனரீதியாக எந்தவித மாற்றமும் தனிநபர் அடையவில்லை!

அதிகாரம், பதவி, இலட்சியத்தை அடைதல் போன்றவைகளில் விருப்பம் கொண்டிருக்கும் சுயநலம், உலகை அழிப்பதோடு மட்டுமல்லாமல், நமது மூளையின் அசாதாரண ஆற்றலையும் அழித்து விடுகிறது. நம்மூளையின் விசேஷமான ஆற்றலை பிரமிக்க வைக்கும் நமது தொழில்நுட்பச் சாதனங்கள் நிரூபணம் செய்கின்றன. ஆனால், தொழில் நுட்பத்தில் செலுத்தும் அதே அளவு, மூளையின் அளவற்ற ஆற்றலை, நாம் உள்முகமாகச் செலுத்தி, பயத்திலிருந்து விடுதலை, துக்கத்தை முடிவிற்கு கொண்டு வருதல், அன்பு, கருணை பற்றி அறிந்துக் கொள்ளல் போன்ற சாதனைகளைப் படைப்பதில்லை. நாம் உள்முகமாகப் பயணித்து ஆராய்ச்சி செய்வதில்லை; உலக துன்பங்களில் நாம் சிக்கிக் கொண்டுள்ளோம்.

அகில உலகமும் வெற்றியை வழிபாடு செய்கிறது. வெற்றியின் மகோன்னதத்தைப்பற்றி அறிவுறுத்தப்பட்டு வளர்ந்தவர்கள் நாம். மகத்தான வெற்றியைப் பெறும் போது, பெருத்த துக்கமும் உடன் வருகிறது.

போட்டி போடவும், பேராவலுடன் செயல்படவும், வெற்றி பெற்று விளங்கவும், சமுதாயத்தின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் நாம் ஊக்குவிக்கப்படுகிறோம். போட்டி, பேராவல், வெற்றி போன்றவை இந்த சமுதாயத்தைப் போன்ற பணக்காரச் சமுதாயங்களுக்கு கடவுள் போல உள்ளது. இந்நிலையில் நீங்கள் எதை எதிர்ப்பார்க்க முடியும்? இளைஞர்கள் செய்யும் குற்றங்களைக் கௌரவிக்க நீங்கள் விரும்புகிறீர்கள், அவ்வளவே.

முரண்பாடுகளுக்கும் போராட்டங்களுக்கும் நாம் மிகவும் பழகிப் போய்விட்டோம்; வாழ்க்கையில் போராட்டங்கள் இல்லையென்றால் வளர்ச்சியே இல்லாதது போலவும், முன்னேற்றம் அடையாதது போலவும், சரிவர செயல்படாதது போலவும், நாம் உணரத் தொடங்குகிறோம்.

### *பிரச்சனைகளுக்கான தீர்வை எண்ணங்களின்படி அணுகுகிறோம்*

மூளையின் செயல்பாட்டால் மனிதன் இதுவரை வாழ்ந்துவருகிறான். பத்திரமாகவும், பாதுகாப்பாகவும், உயிர் பிழைத்திருக்க, மனிதன் மூளையை சுறுசுறுப்பாக செயல்பட வைத்து விஷய அறிவை திறமையோடு சேகரித்து உபயோகிக்கிறான். இப்போது கணினி போன்ற இயந்திரங்கள் பொறுப்பேற்றுக்கொண்டு விட்டன. சிந்தனையின் செயல்பாட்டையும், மனிதன் செய்யக்கூடிய எல்லாவற்றையும், சீக்கிரத்திலேயே கற்றுக்கொண்டு, மனிதனை விட விரைவாக கணினி போன்ற இயந்திரங்கள் எதிர்காலத்தில் செய்யும் போது, மனிதனின் எதிர்காலம் என்ன?

ஆயிரக்கணக்கான வருடங்களாய் பரிணாம வளர்ச்சி அடைந்தாலும் மனித மூளை ஏன் இவ்வாறு குறுகிய எல்லைக்குட்பட்டிருக்கிறது என்பதை நாம் இப்போது ஆய்வு செய்யலாம். ஒரு திசையில், அதாவது தொழில் நுட்பத்தில், மூளைக்கு அபாரமான சக்தி இருக்கிறது. சந்திரனுக்கு மனிதனை அனுப்பியதும், சுகமளிக்கும் வசதிகள், சுதந்திரம், தொலைத்தொடர்பு, ஆகிய வற்றில் வளர்ச்சிகளும், மூளையால் நாம் பெற்றோம். ஆனால், இந்த திசையைத் தவிர மற்ற திசையில் மூளையின் செயல்பாடு வரை யறுக்கப்பட்டுள்ளது. அதாவது, உள் முகமாக பயணிக்க இப்போது மூளைக்கு இயலவில்லை. தொழில் நுட்பத்துறையில் பிரமிக்கத்தக்க சக்தியுடன் மூளையால் செயல்பட முடியுமெனின், உள்முகமாகவும் அத்தகைய சக்தியுடன் அதனால் செயல்பட முடியவேண்டும். தொழில் நுட்பத்துறையிலும், உளரீதியிலும், மூளை சரிநிகரான சக்தியுடன் செயல்படும்போது மூளைக்கு எல்லையற்ற ஆற்றல் கிடைத்துவிடும்.

கட்டுண்ட நம் மனம் தெரிந்து கொள்ள விரும்பும் சமுதாய, பொருளாதார, சமயக் கேள்விகளுக்கான நமது பதில்கள் சற்றே முன்னேற்றம் அடைந்ததாக இருந்தாலும் முழுமையானதாக இருக்காது; அவை வரையறுக்கப்பட்டதாகவே இருக்கும். உதாரணத்திற்கு, *கடவுள்* என்ற சொல்லிற்குப் பதிலாக, இப்போது *அரசாங்கம்* என்ற சொல்லை வழிபடத் தொடங்கியுள்ளோம்; *அரசாங்கம்* என்ற சொல்லை உபயோகிப்பதால், நாம் மிகப்பெரிய முன்னேற்றம் கண்டிருப்பதாகவும் எண்ணுகிறோம். *அரசாங்கம்* என்ற சொல்லை நாம் விரும்பாவிட்டால், *விஞ்ஞானம்* என்ற சொல்லை எடுத்துக்கொள்கிறோம்; நம்முடைய அனைத்துப் பிரச்சனைகளையும் *விஞ்ஞானம்* தீர்த்து வைக்கப்போவது போல, நாம் அந்த சொல்லை வழிபடுகிறோம். ஆக, நாம் எப்பொழுதுமே நம் பிரச்சனைகளுக்கானத் தீர்வை, கட்டுப்படுத்தப்பட்ட எண்ணங்களின்படி அணுகுகிறோம்.

நிறுவப்பட்ட சமயமும் நவீன சமுதாயமும் இணைந்துச் செல்கின்றன; அவை இரண்டுமே வெற்று இதயத்தை விளைவிக்கின்றன. நாம் ஆழ்ந்த சிந்தனையற்றவர்கள். புத்திசாலித்தனத்தில் சிறந்திருக்கும் நாம் ஒருவரையொருவர் அழிக்கக்கூடிய நாசகார ஆயுதங்களைக் கண்டுபிடிப்பதிலும், நமக்குள் வேற்றுமையை மேலும் மேலும் வளர்ப்பதிலும் மிகவும் வல்லவர்கள். ஆனால், அன்பு

செலுத்துவது என்றால் என்ன என்று நமக்குத் தெரியாது; நம் மனதில் சந்தோஷம் இல்லை. தொழில் நுட்ப மனதும் வெற்று இதயமும் கொண்டிருப்பவர் படைப்புத்திறனற்றவர் ஆவார்.

நெருக்கடி, உலகில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் இல்லை. நம் வாழ்க்கையின் முக்கியமான நெருக்கடி, நாம் சிந்திக்கும் முறையிலும், வாழும் முறையிலும், உணரும் முறையிலும் தான் இருக்கிறது - *அவற்றில்* புரட்சிகரமான மாற்றம் ஏற்படவேண்டும்.

நீங்கள் புதிதாக துவக்க வேண்டும். இவ்வாறு கூறுவதின் பொருள் என்னவென்றால், பிரச்சனை எதையும் தீர்த்துவைக்காத இரத்தக் களரியான புரட்சியைச் செய்யாமல், நமது சிந்தனை, உணர்வு, மற்றும் வாழ்க்கை முறையில் புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும் என்பதாகும். உங்களாலும், என்னாலும் மட்டுமே இந்த புரட்சியைக் கொண்டு வர முடியும்; புதிய முழு நிறைவான தனிநபரை உருவாக்கும் புரட்சி நம்மிடமிருந்துதான் தொடங்க வேண்டும். நாம் அறிவாளிகளாய் இருந்தால் இப்பிரச்சனைக்கு *தற்சமயம்* நாமே, *இப்பொழுதே*, தீர்வு காண முயல்வோம். *நிகழ்காலம், இப்பொழுது*, என்பது மட்டுமே நிரந்தரமானது; அது எதிர்காலத்தில் இல்லை. பிரச்சனையின் மேல் நாம் முழுகவனத்தையும் செலுத்த வேண்டும். அதுவும் *இப்பொழுதே!*

*எப்பொழுதுமே, தலை சிறந்த ஞானிகள் பேச்சு, நம்மை வியப்பிலாழ்த்தும் வகையில், எளிமையாகவும் தெளிவாகவும் இருக்கிறது. எளிமையும், தெளிவும் சத்தியத்தின் இயல்புகள் - கிருஷ்ணமூர்த்தியின் இயல்பும் அதுவே.*

-Larry Dossey
நெருக்கடியில் தவிக்கும்
உலகம் Ch-5.

# நாம் எதையும் முழுமையாக பார்ப்பதில்லை

நண்பர் : 'பார்த்தறிதல்' என்ற பொருளில் ''கவனித்தல்'', ''காணுதல்'', ''புரிந்துகொள்ளுதல்'', ''விழிப்போடிருத்தல்'' போன்ற சொற்களையும் உபயோகிக்கிறீர்கள். முழுவதாகவும் தெளிவாகவும் பகுக்கப் படாமலும் பார்க்கும் பார்த்தலைக் குறிப்ப தாகவே அவற்றை நீங்கள் சொல்வதாகத் தோன்றுகிறது. நம்மால் எதை யாவது முழுமையாகப் பார்க்க முடியுமா? எப்பொழுதுமே ஏதாவது இரகசியமாக மறைத்து வைக்கப்பட்ட நிலையில் தான் ஒவ்வொன்றும் இருக்கிறது, சரிதானே? இந்நிலையில் நீங்கள் அரை குறையாகத் தான் பார்க்கிறீர்கள், அல்லவா? இரகசியங்கள் ஒளிந்திருப்பதால் முழுமையாகப் பார்த்தறிய முடியாத நிலையிலிருப் பதைப் பற்றி நீங்கள் விரிவாக விளக்கினால் எனக்கு உதவியாய் இருக்கும். என்னைப் பற்றி முழுவதுமாக அறிந்துக் கொள்ள என்னால் முடிந்தால், என் பிரச்சினைகள் அனைத்தும் ஒரு வேளை முடிவுறலாம். ஆக, பார்த்தறிதல்/காணுதல் என்று எதைச் சொல்கிறீர்கள்? தன்னை ஒருவரால் முழுவதுமாக பார்க்க முடியுமா?

**கிருஷ்ணமூர்த்தி :** அரைகுறையாகத் தான் நாம் எப்பொழுதுமே விஷயங்களைப் பார்க்கிறோம். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன - ஒன்று, நமது கவனமின்மை; இரண்டாவது காரணம் என்னவென்றால் பார்க்கும் விஷயத்தை, பாரபட்சத்துடனும் அவ்விஷயத்தைப் பற்றிய நம் மனோரீதியான கணிப்புகளின் வழியாகவும் பார்க்கிறோம். எனவே, நாம் எதையும் எப்போதும் முழுமையாகப் பார்ப்பதில்லை. நம் எண்ணங்களுடன் தொடர்பு கொள்ளாமல், இயற்கையைப் பார்ப்பது கூட மிகவும் கடினமானதே. ஒரு மலரை, அதனைப் பற்றிய கணிப்பு எதையும் கொண்டிராமல், தாவரவியல் விளக்கம் எதையும் கூறாமல் - மலரை மலராகப் பார்ப்பது - என்பது மிகவும் கடினமாய் இருக்கிறது. கடந்த காலம், சேகரிக்கப்பட்ட அனுபவங்கள் மற்றும் விஷய ஞானம் ஆகியவற்றால் நம்மைப் பற்றி நாம் கொண்டுள்ள கணிப்பை ஒதுக்கி விட்டு, நம்மை நாம் பார்ப்பது என்பது மிகவும் அபூர்வமாக நிகழ்கிறது. நம்மைப் பற்றிய கணிப்பு, கருத்துரு, நமக்கு இருக்கிறது. நாம் 'இத்தகையவர்' 'இப்படிப் பட்டவர் அல்ல' என்ற முறையில் நம்மைப் பற்றி எண்ணிகொள்கிறோம் - நம்மைப் பற்றி ஒரு கருத்தை நிறுவிக் கொள்கிறோம் - அக்கருத்தின் வழியாக, நம்மைப் பார்க்கிறோம். கண்களாலும் புலன்களாலும் மட்டுமல்லாமல், நம் மனதினாலும் பார்க்கிறோம். நம் மனமோ மிகவும் தளைப் பட்டிருக்கிறது. ஆக, அறிவுப் பூர்வமானப் பார்த்தல் என்பது முழுமையற்ற பார்த்தலாகும். இருந்தாலும், அறிவுப்பூர்வமாகப் பார்ப்பது பெரும்பாலருக்கு திருப்தியளிப்பதாக உள்ளது. அவ்வாறு பார்த்து, நாம் அறிந்துக்கொண்டுவிட்டதாக எண்ணுகிறோம். உலகம் முழுவதும் இப்படிப்பட்ட பகுக்கப்பட்ட புரிதல் தான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. முரண்பட்ட கருத்துகளும் தீர்ப்புகளும் கொண்ட போர்க்களமாகவும் நாம் இருக்கிறோம்.

**நண்பர்:** ஆனால், நான் எப்படி முழுமையாகப் பார்ப்பது?.

**கிருஷ்ணமூர்த்தி:** ஒரு பிரச்சினையை முழுவதுமாகப் புரிந்து கொண்டீர்களேயானால், பிறகு, அனைத்து பிரச்சினைகளையும் உங்களால் புரிந்துகொள்ள முடியும்; காரணம், மனிதனின் பிரச்சினைகள் யாவும் ஒன்றோடொன்று தொடர்பு உடையன. பிரச்சினையை அது நிகழ்ந்து கொண்டிருக்கும்போது பார்க்க வேண்டும். நிகழ்விற்கு முன்போ அல்லது பின்போ, அதன் நினைவாகவோ அல்லது அதை உதாரணமாக எடுத்துக்கொண்டோ பார்ப்பதில்

பலனில்லை. பார்த்தறிதல் என்பது உடனடியாக நிகழ்வது; நீங்கள் ஒன்றைப் பார்த்து அதைப்பற்றி உடனே அறிந்துக் கொள்கிறீர்கள். அப்படி நிகழாவிட்டால் நீங்கள் அதைப்பற்றி அறிந்து கொள்ளப் போவதே இல்லை: பார்த்தல், கேட்டல், புரிந்துக்கொள்ளுதல் ஆகியவை உடனடியாக நிகழ்பவை. கவனமாய் கேட்பதும் பார்ப்பதும் கால அளவைக் கொண்டுள்ளவை.

**நண்பர்:** என் பிரச்சினை தொடரு கிறது. பொறாமைக்கோ அல்லது வேறெந்தப் பிரச்சினைக்கோ பழக்கங் களுக்கோ அவை தொடருவதற்கு அவகாசம் தருவது எது?

**கிருஷ்ணமூர்த்தி:** இயல்பாக எழுந்த விழிப்புணர்வு, நுண்ணறிவு ஆகிய வற்றோடு நீங்கள் அவற்றைப் பார்க்காததால் அல்லவா அவை தொடருகின்றன? அவைகளிலிருந்து விடுபட்டுவிடவேண்டும் என்ற தேவையும் கால அவகாசத்தை அனுமதிக்கிறது. ஒன்றைச் சமாளிக்க ஆற்றல் இல்லாதபோது, அந்த ஒன்று பிரச்சினையாகித் தொடருகிறது; ஆற்றலின்மை, பிரச்சினைக்கு உயிரூட்டுகிறது.

**நண்பர்:** திரும்ப பிரச்சினை வராமல் இருக்கும் விதத்தில், பிரச்சினையை எப்படி புரிந்துக் கொள்வது?

**கிருஷ்ணமூர்த்தி:** பிரச்சினை, அது திரும்ப வராமல் இருப்பதிலா அல்லது அதை புரிந்துக் கொள்வ திலா?- எதற்கு அழுத்தம் கொடுத்து முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? பிரச்சினை திரும்ப வரக்கூடாது என்பதற்கு முக்கியத்துவம் அளித்தீர்க ளேயானால், பிரச்சினையிலிருந்து நிரந்தரமாகத் தப்பித்துக் கொண்டு விடவேண்டும் என்று நீங்கள் விரும்புவதாகப் பொருள்படுகிறது. இப்படி விரும்புவது மேலும் ஒரு பிரச்சினையைத் தோற்றுவிக்கிறது. ஆகவே, நம்மால் கேட்கப்பட வேண்டிய கேள்வி ஒன்றே ஒன்றுதான் - பிரச்சினையிலிருந்து விடுபடச் செய்யும் விதத்தில், அப் பிரச்சினையை முழுமையாகப் பார்ப்பது எப்படி என்பதே. அமைதி யிலிருந்து மட்டும் தான் பார்த்தறிதல் கைகூடும்; தொணதொணக்கும் இரைச்சல்மிக்க மனதினால் பார்த்தறிய முடியாது. பிரச்சினையி லிருந்து விடுபடவேண்டும் என்ற விருப்பமாகவோ, பிரச்சினையைக் குறைக்கப் பார்க்கும் முயற்சியாகவோ, அதிலிருந்து தப்பித்தலாகவோ, அதை அடக்குவதாகவோ, அதற்கான மாற்று ஒன்றைக் கண்டுபிடிப்ப தாகவோ மனதில் இரைச்சல் இருக்கக் கூடும். ஆனால், அமைதியான மனம் மட்டும்தான், பிரச்சினையைப் பார்க்கிறது.

**நண்பர்:** அமைதியான மனதை நான் கொண்டிருப்பது எப்படி?

**கிருஷ்ணமூர்த்தி:** அமைதியான மனதை எவ்வாறு பெறுவது என்ற கேள்விக்கே இடமில்லை. மனம் அமைதியாக இருக்கவேண்டும் என்பதிலிருக்கும் உண்மையைப் பார்ப்பது, மனதை தொணதொணப் பிலிருந்து விடுவிக்கும்; அப்படி விடுபட்ட நிலையில், மெய்யுணர்வாக இருக்கும் பார்த்தறிதல் செயல்படுகிறதே தவிர, நாம் அமைதியாய் இருக்கவேண்டும் என்ற கருத்து செயல்படவில்லை. நம் கருத்தின் செயலாக்கமானது முழுமையற்றதாகவும், சிதைந்தும் இருக்கும். முழுமையற்றதற்கும், முழுமையானதற்கும் இடையே தொடர்பு ஏதும் இல்லை. முழுமையற்றது முழுமையானதாக பரிணமிக்க முடியாது. ஆகவே பார்த்தறிதல் என்பது மிக முக்கியமானது. பார்த்தறிதல் என்பது கவனம்; கவனமின்மையே பிரச்சினையைத் தோற்றுவிக்கிறது.

**நண்பர்:** எந்நேரமும் கவனத்துட னிருக்க என்னால் எப்படி முடியும்? அது முடியாத காரியம்!

**கிருஷ்ணமூர்த்தி:** சரியாகச் சொன்னீர்கள், அது முடியாத காரியம் தான். ஆனால், உங்கள் கவன மின்மையைப் பற்றிய விழிப்புணர்வு உங்களிடம் இருக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். சதா கவனத்துடன் எப்படி இருப்பது என்பது முக்கியமல்ல - அது பேராசை கேட்கும் கேள்வியாக உள்ளது. கவனமாய் இருப்பதற்காகச் செய்யப்படும் பயிற்சிகளில் ஒருவர் தன்னை இழந்து விடுகிறார். அழகாக இருப்பதற்கும் அன்பு செய்வதற்கும் நீங்கள் பயிற்சிகள் மேற்கொள்ள முடியாது. வெறுப்பு இல்லாதொழி யும்போது, 'மற்றது' இருக்கிறது. உங்கள் முழுமையான கவனத்தை வெறுப்பின் மீது செலுத்தினால் மட்டுமே, வெறுப்பு மறைகிறது. வெறுப்பைப் பற்றிய விஷய ஞானத் தைச் சேகரிக்காமல், வெறுப்பை புரிந்துகொள்ள வேண்டும். எளிமை யாகத் தொடங்குங்கள்.

**நண்பர்:** நாங்கள் செய்வதற்கென்று பயிற்சி ஏதும் உங்கள் உரையிலிருந்து கிட்டவில்லையென்றால், நீங்கள் பேசுவதில் அர்த்தம் என்ன?

**கிருஷ்ணமூர்த்தி:** கேட்பது தான் மிகவும் இன்றியமையாதது. கேட்ட பிறகு, எதை பயிற்சி செய்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. உடனடி செயல்பாடாக அமைவது கேட்டல். பிரச்சனைகளுக்கு கால அவகாசத் தைத் தருவது பயிற்சிகள். பயிற்சி மேற்கொள்ளாதீர்கள்; தவறுகளை மட்டுமே உங்களால் பயிற்சி செய்ய முடியும். எப்பொழுதுமே புத்தம் புதிதாக மலர்வது கற்றல்.

Urgency of Change, Ch - 15

## நமது தொழில்

**கேள்வி:** 'நமது தொழில்' (Vocation) என்ற சொற்களை நீங்கள் எந்த அர்த்தத்தில் குறிப்பிடுகிறீர்கள் என்று தயவு செய்து எங்களுக்குச் சொல்லுங்கள். சாதாரணமாக அச் சொற்கள் உணர்த்தும் அர்த்தத்தி லிருந்து வேறுபட்ட ஒன்றை, நீங்கள் குறிப்பிடுவதாக நான் எண்ணு கிறேன்.

**கிருஷ்ணமூர்த்தி:** வழக்கறிஞர், போர்வீரர், போலீஸ்காரர், வர்த்தகர் போன்று பல்வேறு விதமான தொழில்களை நாம் செய்கிறோம். சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கும் தொழில்களாகச் சில இருக்கின்றன. உதாரணத்திற்கு, வழக்கறிஞர், போர்வீரர், போலீஸ்காரர் மற்றும்

மற்றவர்களைத் தன்னளவிற்குச் செல்வந்தராக்காத தொழிலதிபர் போன்றவர்களைச் சொல்லலாம்.

குறிப்பிட்ட ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்து, அதைச் செய்கிறோம். நம் பிள்ளைகளை, குறிப்பிட்ட தொழிலுக்குப் பயிற்றுவிக்கிறோம் - இதனால், சமூகத்தில், சச்சரவுகளை நாம் தோற்றுவிக்கிறோம் அல்லவா? நீங்கள் ஒரு தொழிலைத் தெரிவு செய்கிறீர்கள், நான் ஒன்றைத் தெரிவு செய்கிறேன் - இதனால் நமக் கிடையே சச்சரவு ஏற்படுகிறதல் லவா? இது தானே நடந்து கொண்டிருக்கிறது? நமது உண்மை யான சீரிய வாழ்க்கைத் தொழில் என்ன என்று நாம் தெரிந்து கொள்ளாததே, சச்சரவுகளுக்குக் காரணம். சமூகத்தின் வரைமுறை களாலும், குறிப்பிட்ட பண்பாட்டி னாலும், ஒரு சில துறைகளைச் சார்ந்த தொழில்களையே தேர்ந்தெடுக் கிறோம். அதனால், மக்களிடையே போட்டியும் வெறுப்பும் பெருகுகிறது. இவற்றை நாம் அன்றாட வாழ்வில் பார்க்கிறோம்; இவற்றைப் பற்றி நாம் அறிவோம்.

உண்மையான சீரிய வாழ்க்கைத் தொழிலை, நாம் அனைவரும் செய்யும் வகையில் அமைந்திருக்கும், வேறு விதமான வாழ்க்கைமுறை யென்று ஏதேனும் உள்ளதா? தயவு செய்து கவனியுங்கள். ஐயா! மனிதன் செய்ய வேண்டிய வேலை ஒன்றுதானல்லவா? அல்லது, பல வகைப்பட்டதா? நாம் கணக்கி லடங்கா தொழில் வகைகளைப் பார்க்கிறோம். நீங்கள் ஒரு குமாஸ்தா, நான் காலணிகளுக்குப் பாலீஷ் போடு கிறேன், அவர் ஒரு பொறியாளர், இவர் ஒரு அரசியல்வாதி - இப்படிப் பல வகையாக இருக்கிறது. இவர் களுக்கிடையே சச்சரவுகளும் வெறுப்பும் உள்ளது. இதை நாம் நன்கறிவோம். இது நமக்குப் பழக்கப்பட்ட ஒன்றுதான்.

மனிதனுடைய வாழ்க்கைத் தொழிலாக ஒன்று மட்டும் இருக்கிறதா என்று பார்ப்போம். அதை நம்மால் கண்டுபிடிக்க முடியுமே யானால், பல தரப்பட்ட செயல் திறனால் மனிதர்களுக்கிடையே தோன்றும் சச்சரவுகள் தோன்றாது. மனிதனுக்கு ஒரே ஒரு சீரிய தொழில் மட்டும் தான் உண்டு என்று நான் சொல்கிறேன். ஒரே ஒரு சீரிய தொழில் தான் உண்டு. செய்ய வேண்டிய தொழில் பலதரப் பட்டவை அல்ல. உண்மை என்றால் என்ன என்பதைக் கண்டுபிடிப்பது ஒன்றே மனிதனின் தொழிலாகும். இப்படிச் சொல்வது, ஏதோ பூடகமாக, புரிந்து கொள்ள முடியாதவாறு சொல்லப்படும் விஷயம் அல்ல.

நம் ஒரே சீரிய தொழிலாக இருக்கும், உண்மை என்றால் என்ன என்ற தேடுதலில், நீங்களும் நானும் ஈடுபடும்போது, நமக்கிடையே போட்டி இல்லை. இந்த தேடுதலில், நான் உங்களுடன் போட்டா போட்டி போட மாட்டேன். உண்மை என்றால் என்ன என்று நான் சொல்வதிலிருந்து மாறுபட்டு நீங்கள் சொன்னாலும், நான் சண்டை போட மாட்டேன்; நீங்கள் பிரதம மந்திரியாக இருக்க லாம், நான் பேரவா கொண்டு, உங்கள் இடத்தை ஆக்ரமிக்க முயற்சிக்க மாட்டேன். ஏனென்றால், நானும் உங்களுடன் சரி நிகர் சமானமாக, உண்மை என்றால் என்ன என்ற தேடுதலில் ஈடுபட்டிருப்ப தால், நமக்குள் போட்டி இல்லை. ஆகவே, நம் உண்மையான சீரிய தொழிலை நாம் கண்டுகொள்ளும் வரை, நம்மிடையே போட்டியும் வெறுப்பும் இருக்கும். இந்நிலையைச் சீர்திருத்த, எந்தவிதமான சட்டங் களைக் கொண்டு வந்தாலும் அச் சட்டங்கள், மேலும் குழப்பத்தையே விளைவிக்கும்.

முறையான கல்வி, மற்றும், தகுந்த ஆசிரியரின் உதவியோடு, உண்மை என்றால் என்ன என்று சுதந்திரமாக ஒரு மாணவன் கண்டு பிடிக்க உதவ முடியுமா? உண் மையை, கருத்துச்சுருக்கமாக இல்லா மல், உறவுகளிலுள்ள உண்மை களையும் அறியும்வண்ணம் மாணவனுக்கு உதவ வேண்டும். இயந்திரங்களுடன் அவனுக் கிருக்கும் தொடர்பு, இயற்கையுடன் அவன் கொண்டிருக்கும் உறவு, பணத்திற்கும் அவனுக்கும் உள்ள உறவு, சமூகத்துடன் கொண்டுள்ள உறவு, மற்றும் அரசாங்கத்துட னிருக்கும் தொடர்பு என்பது போன்ற அவனுடைய உறவுமுறைகள் பல வற்றின் உண்மையை, சுதந்திரமாக அறியும் வண்ணம், அவனுக்கு, அவன் பெறும் கல்வியும் ஆசிரியரும் உதவ வேண்டும். இவ்வாறு உதவக் கூடிய ஆசிரியர், நடைமுறையில் உள்ள ஆசிரியர்கள் போலில்லாமல், வேறுபட்டவராக இருக்கவேண்டும், அல்லவா? மாணவனுக்குச் சுதந்திரம் அளிப்பதில் அவர் அக்கறையுடைய வராக இருக்க வேண்டும். அப்படிப் பட்ட நிலையில், மாணவன் விவேகத்தை வளர்த்துக் கொள்வது பற்றி ஆராய முற்படுவான். படிப் படியாகத் தரம் குறைந்து வரும் சமூகத்தினால், விவேகத்தைத் தளை செய்து விட முடியாது.

மனிதன் செய்ய வேண்டிய சீரிய தொழில் என்று ஒன்று இருக்கிறதா? மனிதன் தனிப்பட்டு வாழ முடியாது; உறவுமுறைகளின் தொடர்போடு அவன் வாழ்கிறான். உண்மையையும், உறவுமுறைகளின் உண்மையையும், அந்தத் தொடர்பில் அவனால் கண்டுகொள்ள முடியா விட்டால், அங்கு சச்சரவுகள் தோன்றுகின்றன.

உங்களுக்கும் எனக்கும் உள்ள சீரிய தொழில் ஒன்றே ஒன்று தான். உண்மையைத் தேடுதலில் அதன் வெளிப்பாடு இருக்கும். அதில், நாம் ஒருவரையொருவர் அழித்துக் கொள்ள மாட்டோம், சண்டை போட மாட்டோம். சரியான கல்விமுறை மற்றும் தகுந்த ஆசிரியர் மூலமாகத் தான், முதலில் தொடங்க வேண்டும். ஆசிரியருக்கும் தகுந்த கல்வி தேவை. அடிப்படையில் ஆசிரியர், தகவல் களைத் தருபவர் மட்டுமல்ல, மாணவனுக்குள் சுதந்திரத்தையும், உண்மை என்றால் என்ன என்று கண்டுபிடிக்கவேண்டும் என்ற உத்வேகத்தையும் கொண்டு வருபவராக இருக்கிறார்.

உள்மனப் புரட்சி, பக்கம். 279

## உயிரோட்டமுள்ள விழிப்புணர்வு

பார்ப்போன்தான் பார்க்கப்படுவது (observer is the observed) என்ற உண்மை விழிப்புணர்வு எதைப் பார்க்கிறதோ, அவ்வாறு பார்க்கப் படுவதுடன் இணைந்து இனம் காண்பதால் அல்ல. எதனுடனும் தன்னை இணைத்துக் கொள்வது மிகவும் சுலபம். குடும்பம், கணவன், மனைவி, நம் நாடு என எதனுட னாவது தம்மைப் பெரும்பாலோர் இணைத்துக் கொண்டு இனம் காண்கின்றனர். இனம் காண்பதில் ''இனம் காண்பவன்'' இருப்பான். இவ்வாறு செய்வதால்தான் பல துயரங்களும் பல சண்டைகளும் நிகழ்ந்துள்ளன. இந்த இனம் காணும் செயலிலிருந்து முற்றிலும் மாறு பட்ட ஒன்றை ஆழ்ந்து கவனிக்கப் போகிறோம். இதை வாய்ப்பேச்சாக இல்லாமல் மனமாரப் புரிந்துகொள்ள வேண்டும். ஆதிகாலத்தில் சீனா வில் ஒரு ஓவியன் ஒரு மரத்தை வரைபடமாகத் தீட்டவேண்டுமென் றால் அந்த மரத்தின் முன் பல நாட்க ளாக, பல மாதங்களாக, பல வருடங் களாக உட்கார்ந்து கொள்வான். எவ்வளவு காலம் என்று கணக்குப் பாராமல் அவன் ''உள்ளமே மரம்'' என்ற நிலை எய்தும் வரை உட் கார்ந்திருப்பான். அவன் ''தன்னை'' மரத்துடன் ஐக்கியப்படுத்திக் கொள்ள மாட்டான். ஆனால் அவன் உள்ளம் ''மரமாகவே'' ஆகும் வரை உட்கார்ந் திருப்பான். அப்படியென்றால் அவனுக்கும் அந்த மரத்திற்கும் கால இடைவெளியில்லை. பார்ப்போ னாகிய அவனுக்கும் பார்க்கப்படும் மரத்திற்கும் கால இடைவெளி யில்லை, மரத்தின் அழகை அனுபவிக்கும் ''அனுபவிப்பவன்'' இல்லை, மரத்தின் அசைவுகளை, நிழலை, இலைகளின் அமைப்பை, மரத்தின் நிறங்களைக் காணும் ''காண்பவன்'' இல்லை. அவன் உள்ளம் முழுவதும் மரமாகவே ஆகி விட்ட நிலையில்தான் அவன் வரை படம் தீட்டத் தொடங்குவான்.

பார்ப்போன்தான் பார்க்கப்படு வது என்பதைப் புரிந்துகொள்ளாமல் பார்ப்போன் இயங்கினால் அவன் மேலும் வரிசையாகக் கற்பனை உருவங்களை ஏற்படுத்தி அதில் சிக்கிக் கொள்வான். பார்ப்போன் தான் அவன் பார்க்கும் கற்பனை உருவகங்கள். பார்ப்போன், பார்க்கும் கற்பனை உருவகங்களிலிருந்து தனிப்பட்டவன் அல்லன். தான் தனிப்பட்டவன் என்று பார்ப்போன் நினைத்தபோது பார்க்கப்படுவதை ஏதாவது செய்ய வேண்டுமென்று முயன்றான். ஆனால் 'பார்ப்பவன் தான் பார்க்கப்படுவது' என்று அவன் உணர்ந்தபின் அது வேண்டாம், அது வேண்டும் என்ற நிலை நீங்கிப் போராட்டம் நின்று விட்டது.

...அறிந்ததினின்றும்
விடுதலை
Ch.12. பக்கம். 147-149.

## கிருஷ்ணமூர்த்தி ஃபவுண்டேஷன் இந்தியா வருடாந்திர மாநாடு, 2010

நடப்பு ஆண்டுக்கான கிருஷ்ணமூர்த்தி ஃபவுண்டேஷன் இந்தியாவின் வருடாந்திர மாநாடு, ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டத்திலுள்ள ரிஷிவேலி பள்ளியில் 2010 நவம்பர் 23ந் தேதி காலையிலிருந்து 2010 நவம்பர் 26ந் தேதி மதியம் வரை நடைபெறவுள்ளது.

மாநாட்டில் பங்கு பெற விரும்புவோர், விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்:

The Office (The KFI Gathering Committee)
Rishi Valley Education Centre
Rishi Valley - 517 352
Chittoor Dist, Andhra Pradesh
Telephone : 08571 280622
08571 280582
Fax : 08571 280261
Email : office@rishivalley.com

அதிக இடவசதி இல்லாததால், விண்ணப்ப எண் வரிசைப்படி பதிவுகள் செய்யப்படும். இந்திய பிரஜைகளுக்கு ஒரு நபருக்கு ரூபாய் 1500/–ம் அயல் நாட்டவர்களுக்கு ஒரு நபருக்கு அமெரிக்க டாலர் 100–ம் மாநாட்டு கட்டணமாய் வசூலிக்கப்படும்

*Published in February, June & October.*
*Registered with The Registrar of Newspapers for India under No. TNTAM/2006/17823*

Periodical

*If undelivered please return to:*
KRISHNAMURTI FOUNDATION INDIA
Vasanta Vihar, 124,126 (Old 64, 65) Greenways Road
Chennai - 600 028. Tel: 24937803/24937596
E-mail: publications@kfionline.org
Websites: www.kfionline.org / www.jkrishnamurti.org

*Published by G. Rajeev on behalf of the Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 (Old 64, 65) Greenways Road, Chennai - 600 028.*
*Printed by N. Subramanian at Sudarsan Graphics Offset Press, 27 Neelakanta Mehta Street, T. Nagar, Chennai – 600 017. Editor: K. Krishnamurthy*